**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032

தொலைபேசி 044–22201337

மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)**

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்:** 185/மா/2023

**நாள்: 02.11.2023**

திரு. செ.ஈஸ்வரன்
திருப்பூர் – முறையீட்டு மனுதாரர்

ஆணையர்,
திருப்பூர் மாநகராட்சி,
திருப்பூர். – எதிர்மனுதாரர்

திருப்பூர், 15, வேலம்பாளையம், அருமைக்காரர் தோட்டம், நேரு வீதி விரிவு, நெ.21 –A என்கிற முகவரியில் வசிக்கும் திரு. செ.ஈஸ்வரன் என்பவரின் 09.06.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 12.06.2023–ல் பெறப்பட்டு, 185/மா/2023 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுதாரரது மனு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

<u>ஆணை</u>

திருப்பூர், 15, வேலம்பாளையம், அருமைக்காரர் தோட்டம், நேரு வீதி விரிவு, நெ.21–A என்கிற முகவரியில் வசிக்கும் திரு. செ.ஈஸ்வரன் என்பவர் தனது 09.06.2023 நாளிட்ட மனுவில் கீழ்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

திருப்பூர் மாவட்டம், வேலம்பாளையம், அருமைக்காரர் தோட்டம், நேரு வீதி விரிவாக்கத்தில், ஊர்ப்பொதுமக்களின் பங்களிப்போடு விநாயகர், முருகன் கோவில் கட்டப்பட்டுள்ளது. ஆனால் தனிநபர் ஒருவர் தன் வருமானத்திற்காக மேற்படி கோயிலிலிருந்து 100 மீட்டர் தூரத்தில் சுமார் 200க்கும் மேற்பட்ட மக்களின் வாழ்வாதாரமாக இருக்கக்கூடிய பொது வழியை ஆக்கிரமித்து வேறொரு விநாயகர் கோவில் ஒன்றை கட்டியுள்ளார். எங்களது குடியிருப்புகளுக்கு செல்லும் ஒரே மாநகரப் பொது தார்சாலையை ஆக்கிரமித்து கட்டியுள்ள கோயில் ஆக்கிரமிப்பினை கடந்த 29.12.2021 அன்று கோவில் சுவற்றில் நோட்டீஸ் ஒட்டியபின் இன்று வரை ஆக்கிரமிப்பை அகற்றவில்லை. எனவே உடனடியாக கோயில் ஆக்கிரமிப்பை அகற்றிட ஆவன செய்திடவும், 2 வருடமாக கிடப்பில் போட்டுள்ள மாநகராட்சி நிர்வாகத்தின் மீதும் உரிய நடவடிக்கை எடுக்க ஆவன செய்ய வேண்டுகிறேன்" என தெரிவித்துள்ளார்.

**2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 03.07.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் திருப்பூர் மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.**

3) இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 17.10.2023 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 11.10.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4) மனுதாரர் 13.10.2023 நாளிட்ட மின்னஞ்சல் மூலம் 17.10.2023 அன்று ஒரு குடும்ப நிகழ்ச்சி இருப்பதால் அன்றைய தினம் விசாரணைக்கு வர இயலாத சூழல் இருப்பதால் விசாரணை தேதியை 25.10.2023க்குப் பின்னர் மாற்றித்தந்து உதவுமாறு கேட்டுக்கொண்டார்.

**5) திருப்பூர் மாநகராட்சியின் உதவி செயற்பொறியாளர் 17.10.2023 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை பின்வருமாறு சமர்ப்பித்துள்ளார்.**

" திருப்பூர் மாநகராட்சி மண்டலம் 1 வார்டு 1, வேலம்பாளையம் பகுதி, அருமைக்காரர் தோட்டம் என்ற இடத்தில் மாநகராட்சி சாலையில் கோவில் கட்டப்பட்டுள்ளதைத் தொடர்ந்து திருப்பூர் மாநகராட்சி சட்டம் 258 (4) பிரிவின்படி ஆக்கிரமிப்பாளர்களுக்கு அறிவிப்புகள் 05.08.2021 மற்றும் 20.12.2021 ஆகிய தேதிகளில் சார்பு செய்யப்பட்டுள்ளன. அங்குள்ள கோவிலில் வழிபாடு செய்யும் பக்தர்கள் அக்கோவிலை அகற்றக்கூடாது என்றும், மனுதாரர் போன்ற ஒருசாரார் கோவிலுக்கு அருகில் போக்குவரத்து இடைஞ்சல் ஏற்படுவதாகத் தெரிவித்து கோவிலை அகற்ற வேண்டும் என தெரிவித்துள்ளனர். மேற்கண்ட இடத்தில் பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் சட்டம் ஒழுங்கு பிரச்சனை ஏற்படும் என்பதால், இதுகுறித்து வருவாய் கோட்டாட்சியர் அவர்களால் குற்றவியல் நடைமுறை சட்டப்பிரிவு 107ன் கீழ் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் இந்நேர்வு தொடர்பாக திருப்பூர் மாநகராட்சி ஆணையர் அளித்துள்ள 16.10.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**6) திருப்பூர் மாநகராட்சி ஆணையாளர் தனது 16.10.2023 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்**:-

" திருப்பூர் மாநகராட்சி மண்டலம் எண் 1, வார்டு எண் 1, வேலம்பாளையம் பகுதி, அருமைக்காரர் தோட்டம் என்ற இடத்தில் மாநகராட்சி சாலையில் கோவில் கட்டிடம் கட்டியுள்ளதற்கு திருப்பூர் மாநகராட்சி சட்டம் 258 (4) பிரிவின்படி அறிவிப்புகள் வழங்கப்பட்டு 16.08.2021-ல் மனுதாரருக்கு பதிவு தபால் மூலம் சார்வு செய்யப்பட்டுள்ளது. அறிவிப்பினை பெற்றுக்கொண்ட ஆக்கிரமிப்புதாரர் அதன் மீது எந்த முகாந்திரமும் சமர்ப்பிக்கவில்லை. மேலும் 29.12.2021 அன்று மேற்கண்ட கோவில் சுவற்றில் அறிவிப்பு ஒட்டியும் சார்வு செய்யப்பட்டுள்ளது.

மாண்புமிகு செய்திதுறை அமைச்சர் அவர்களால் பெறப்பட்ட மனுவில் மேற்கண்ட இடத்தில் ஒரு தரப்பினர் எவ்வித பிரச்சினையுமின்றி கோவில் வைத்து பூஜை செய்து வருவதாகவும், பொதுமக்கள் அமைதிக்கு எவ்வித பிரச்சினையும் ஏற்படவில்லை எனவும், கோவிலை அகற்றக்கூடாது என மனு அளித்துள்ளனர்.

குடும்ப நலச் சங்க செயலாளர் திரு.செ.ஈஸ்வரன் என்பவர் தலைமையிலான தரப்பினர் மாநகராட்சி சாலையில் ஆக்கிரமிப்பு செய்து கோவில் கட்டப்பட்டுள்ளதால், போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுவதாகக்கூறி கோவிலை அகற்ற கோரி மனு சமர்ப்பித்துள்ளார்.

அதன்படி, இவ்வலுவலக கடிதங்கள் மூலம் கோவில் ஆக்கிரமிப்பு அகற்றுவதற்கு இரு தரப்பினர்கள் இடையே சட்டம் ஒழுங்கு பிரச்சினை ஏற்படாத வண்ணம் போதிய பாதுகாப்புடன் ஆக்கிரமிப்பு அகற்றும் பணியினை மேற்கொள்ள தகுந்த தேதியினை நிர்ணயம் செய்து தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. ஆனால் இது நாளது வரை தேதி நிர்ணயம் செய்து தரப்படவில்லை என்ற விபரம் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், காவல்துறை மூலம் உரிய தேதி நிர்ணயித்து வழங்கும் பட்சத்தில் ஆக்கிரமிப்பு அகற்றப்படும் என தெரிவிக்கப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

7) மனுதாரர் மின்னஞ்சல் மூலம் விசாரணைக்கு மாற்று தேதி கோரியதற்கிணங்க மனுதாரருக்கு ஒரு வாய்ப்பு கொடுக்கும் விதமாக 17.10.2023 நாளிட்ட அழைப்பாணை மூலம் 26.10.2023 அன்று நடைபெறும் விசாரணைக்கு நேரடியாக ஆஜராகும்படி அறிவுறுத்தப்பட்டது.

8) மனுதாரர் 26.10.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை ஒப்பமிட்டு சமர்ப்பிக்காமல் சென்று விட்டார்.

**9) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, திருப்பூர் மாநகராட்சி உதவி செயற்பொறியாளரின் வாக்குமூலம் மற்றும் திருப்பூர் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:**

மனுதாரர், திருப்பூர் மாவட்டம், வேலம்பாளையம், அருமைக்காரர்தோட்டம், நேரு வீதி விரிவாக்கத்தில் ஊர்ப்பொதுமக்களின் பங்களிப்போடு விநாயகர், முருகன்கோவில் கட்டப்பட்டுள்ளது. ஆனால் தனிநபர் ஒருவர் தன் வருமானத்திற்காக மேற்படி கோயிலிருந்து 100 மீட்டர் தூரத்தில் சுமார் 200க்கு மேற்பட்ட மக்களின் வாழ்வாதாரமாக இருக்கக்கூடிய பொது வழியை ஆக்கிரமித்து வேறொரு விநாயகர் கோவில் ஒன்றை கட்டியுள்ளார். பொதுவழியை மறித்து கட்டியுள்ளதால் எங்கள் வீடுகளுக்கு செல்ல சரியான பாதை இல்லை. எனவே மேற்கண்ட ஆக்கிரமிப்பினை அகற்றக்கோரி மாவட்ட ஆட்சியர், திருப்பூர் மாநகராட்சி அலுவலர்கள் ஆகியோருக்கு புகார் மனு அளித்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே மேற்கண்ட ஆக்கிரமிப்பை அகற்ற ஆவன செய்யுமாறு கோரியுள்ளார்.

திருப்பூர் மாநகராட்சி மண்டலம் எண் 1, வார்டு எண் 1, வேலம்பாளையம் பகுதி, அருமைக்காரர் தோட்டம் என்ற இடத்தில் மாநகராட்சி சாலையில் கோவில் கட்டிடம் கட்டியுள்ளதற்கு திருப்பூர் மாநகராட்சி சட்டம் 258 (4) பிரிவின்படி அறிவிப்புகள் வழங்கப்பட்டு 16.08.2021ல் மனுதாரருக்கு பதிவு தபால் மூலம் சார்வு செய்யப்பட்டுள்ளது. அறிவிப்பினை பெற்றுக்கொண்ட ஆக்கிரமிப்புதாரர் அதன் மீது எந்த முகாந்திரமும் சமர்ப்பிக்கவில்லை. மேலும் 29.12.2021 அன்று மேற்கண்ட கோவில் சுவற்றில் அறிவிப்பு ஒட்டியும் சார்வு செய்யப்பட்டுள்ளது எனவும், மாண்புமிகு செய்திதுறை அமைச்சர் அவர்களால் பெறப்பட்ட மனுவில் மேற்கண்ட இடத்தில் ஒரு தரப்பினர் எவ்வித பிரச்சினையுமின்றி கோவில் வைத்து பூஜை செய்து வருவதாகவும், பொதுமக்கள் அமைதிக்கு எவ்வித பிரச்சினையும் ஏற்படவில்லை எனவும், கோவிலை அகற்றக்கூடாது என மனு அளித்துள்ளனர் எனவும், குடும்ப நலச் சங்க செயலாளர் திரு.செ.ஈஸ்வரன் என்பவர் தலைமையிலான தரப்பினர் மாநகராட்சி சாலையில் ஆக்கிரமிப்பு செய்து கோவில் கட்டப்பட்டுள்ளதால், போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுவதாகக்கூறி

கோவிலை அகற்ற கோரி மனு சமர்ப்பித்துள்ளார் என்பதை ஆணையரின் அறிக்கை வாயிலாக அறிய முடிகிறது.

மாநகராட்சியானது கடிதங்கள் மூலம் கோவில் ஆக்கிரமிப்பு அகற்றுவதற்கு இரு தரப்பினர்கள் இடையே சட்டம் ஒழுங்கு பிரச்சினை ஏற்படாத வண்ணம் போதிய பாதுகாப்புடன் ஆக்கிரமிப்பு அகற்றும் பணியினை மேற்கொள்ள தகுந்த தேதியினை நிர்ணயம் செய்து தெரிவிக்குமாறு காவல்துறையை கேட்டுக்கொண்டுள்ளது. ஆனால் இதுநாளது வரை தேதி நிர்ணயம் செய்து தரப்படவில்லை என்ற விபரம் தெரிவிக்கப்படுகிறது. மேலும், காவல்துறை மூலம் உரிய தேதி நிர்ணயித்து வழங்கும் பட்சத்தில் ஆக்கிரமிப்பு அகற்றப்படும் என்பதை திருப்பூர் மாநகராட்சி ஆணையரின் அறிக்கையிலிருந்து அறிய முடிகிறது.

திருப்பூர் மாநகராட்சி அருமைக்காரர் தோட்டம் பகுதியில் சாலை ஆக்கிரமிப்பு குறித்து களப்பணியாளர்கள் உரிய நேரத்தில் ஆய்வு செய்திருந்தால் இதுபோன்ற ஆக்கிரமிப்புகளை தவிர்த்திருக்கலாம். எனவே திருப்பூர் மாநகராட்சி ஆணையரின் அறிக்கையில் குறிப்பிட்டுள்ள விளக்கங்கள் ஏற்கக்கூடிய வகையில் இல்லை. மேலும் மாநகராட்சியானது காலதாமதம் செய்கின்றதோ என்ற எண்ணம் பொதுமக்கள் மத்தியில் ஏற்படவும் வாய்ப்புள்ளது. எனவே இந்நேர்வு தொடர்பாக காவல்துறையுடன் இணைந்து உரிய தீர்வு ஏற்பட நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும்.

திருப்பூர் மாநகராட்சி ஆணையர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளவாறு காவல்துறையின் உதவியோடு சட்டம் ஒழுங்கு பிரச்சினை ஏற்படா வண்ணம் போதிய பாதுகாப்புடன் இந்நேர்வில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் திருப்பூர் மாநகராட்சி ஆணையரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

மனுதாரர் கோரியிருந்தபடி 17.10.2023 அன்று வர இயலாத காரணத்தினால் விசாரணையில் கலந்து கொள்ள ஏதுவாக 26.10.2023 அன்று மனுதாரர் கலந்து கொள்ள வாய்ப்பளிக்கப்பட்டது. மனுதாரர் 26.10.2023 அன்று விசாரணையில் கலந்து கொண்டு வாக்குமூலத்தை சமர்ப்பிக்காமல் சென்றதை இம்முறைமன்றத்தை அவமதித்ததாகக் கருதி மனுதாரரை இம்முறைமன்றம் வன்மையாக கண்டிக்கிறது. மேலும் இம்முறைமன்றத்தின் மாண்பையும், நேரத்தையும் விரயமாக்கிய திருப்பூர் மாவட்டம், திருப்பூர், 15 வேலம்பாளையம், அருமைக்காரர் தோட்டம், நேரு வீதி நெ 21–A ல் வசிக்கும் திரு.செசஸ்வரன் அவர்களால் இம்முறைமன்ற நடுவத்திற்கு அளிக்கப்படும் மனுக்கள் மீது இம்முறைமன்ற நடுவத்தால் 6 (ஆறு) மாதங்களுக்கு நடவடிக்கை ஏதும் மேற்கொள்ளப்படாது' என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

The response of the Tiruppur Corporation in the issue raises doubts about its credibility in as much as the case has been pending for more than 2 years now. Can not the Commissioner talk to the Police Commissioner and expedite action? Why did the Corporation fail to take action from 2021 when the encroachment on the Corporation property of the road was made ? Had the Corporation acted in time this development of completion of the structure could have been controlled and removed. Moreover if any perceived threat of Law and Order is seen in one case then what would the Corporation do when large scale encroachments take place on its vested properties like roads, streets, drains, paths etc. The Forum refuses to buy the logic of Law and Order reason as contended by the Commissioner of Tiruppur Corporation. The Director of Municipal Administration is instructed to pull up the Tiruppur Corporation officials who defaulted in

taking action against the encroachment for nearly 3 years now by launching disciplinary action against the concerned functionaries of the Corporation.

The petitioner's conduct before this Forum by wilfully refusing to depose in a written statement and vanishing into thin air after verbal narration is censured by the Forum. Such irresponsibility, arrogant temperament, apathy and contemptuous indifference are censured by the Forum. His petitions will not be entertained for the next 6 months.

2023–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 02–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. செ.ஈஸ்வரன்,
த/பெ. திரு.செல்லப்பன்,
21–A, நேரு வீதி விரிவு,
அருமைக்காரர் தோட்டம்,
15, வேலம்பாளையம்,
திருப்பூர் – 641 652.

2) ஆணையர்,
திருப்பூர் மாநகராட்சி,
திருப்பூர்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028

4) இணை இயக்குநர்
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்